Register No. | | | | | | | | |

**TA4A** **7183–26**

(For the candidates admitted from 2017–2018 to 2022-2023)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, MAY 2026.

(Three-year Regular Course)

Second Year – Fourth Semester

LAW OF EVIDENCE

MOTHER TERASA LAW COLLEGE LIBRARY ILLUPPUR - 622102.

Time : $2\frac{1}{2}$ hours Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Explain the competency and compellability of witness.

ஒரு சான்றுரைஞரின் தகுதி மற்றும் கட்டாயப்படுத்தல் தன்மையை விளக்குக.

2. Write an essay on burden of proof in criminal cases.

குற்றவியல் வழக்குகளில் மெய்ப்பிக்கும் சுமை குறித்து கட்டுரை வரைக.

3. Explain the rule of Estoppel in Indian Evidence Act. What are its types?

இந்திய சாட்சியச் சட்டத்தில் முரண் தடை விதியை விளக்கிக் கூறுக. அதன் வகைகள் யாவை?

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Define "Admission" and discuss the persons who are entitled to make admission.

ஏற்புரை என்பதை வரையறுத்து, எவருடைய ஏற்புரை ஏற்கத்தக்கதாக கூற முடியும் என்பதை விவாதிக்க.

5. Distinguish between presumption of fact and presumption of law.

பொருண்மை துணிபு மற்றும் சட்டத் துணிபு ஆகியவற்றை வேறுபடுத்திக் காட்டுக.

6. State the cases in which statements of persons who cannot be called as witnesses are relevant.

சாட்சியாக அழைக்கப்பட முடியாத நபர்களின் உரைகள் தொடர்புற்றவையாக உள்ள சூழ்நிலைகளைக் கூறுக.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Facts in Issue.

வழக்கில் உள்ள பொருண்மைகள்

(b) Judicial Notice

நீதிமுறையில் கவன ஏற்பு (நீதிமுறை அறிவிப்பு)

(c) Privileged communications

காப்புடைச் செய்திகள்

(d) Impeaching character of witness

சான்றுரைஞரின் நாணயத்தைப் பழித்தல்

(e) Ambiguous Documents.

பொருள் மயக்க ஆவணங்கள்

(f) Refreshing Memory.

நினைவாற்றலை புதுப்பித்தல்

(g) Expert opinion.

வல்லுநர் கருத்து

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. 'A' commits murder of 'B' and pleads insanity while committing murder. In this circumstance on whom does the burden of proof lie?

'A' என்பவர் 'B' என்பவரை கொலை செய்கிறார். கொலை நடந்த சமயம் தான் பித்து நிலையராக இருந்ததாக வாதிடுகிறார். இந்தச் சூல்நிலையில் மெய்ப்பிக்கும் பொறுப்பு யார் மீது சுமத்தப்படும்?

9. 'A' is accused before Court of Sessions of having given false evidence before 'B', a magistrate. Can 'B' be compelled to depose what 'A' had said to him?

'B' என்ற குற்றவியல் நீதிமன்ற நடுவர் முன்பு பொய் சான்று அளித்ததற்காக 'A' என்பவர் அமர்வு நீதிமன்றத்தில் குற்றம் சாட்டப்பட்டுள்ளார். 'A' என்ன கூறினார் என கூறும்படி 'B'யைக் கட்டாயப்படுத்த முடியுமா?

10. The accused left a letter recording his confession near the dead body of the victim with the intention of being seen by the police officer. What is the nature of the statement? Is it a relevant statement?

குற்றம் சாட்டப்பட்டவர் கொலை செய்யப்பட்டவரின் உடலருகே குற்ற ஏற்புரையை பதிவு செய்து கடிதம் ஒன்றை காவல் துறை அலுவலர் பார்க்க வேண்டும் என்ற எண்ணத்துடன் வைக்கிறார். அக்கூற்றின் தன்மை மற்றும் தொடர்புடைமை என்ன?

---

Register No. | | | | | | | | |

**TA4B**

**7184–26**

(For the candidates admitted from 2017–2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, MAY 2026.

(Three-year Regular Course)

Second Year – Fourth Semester

ADMINISTRATIVE LAW

Time : $2\frac{1}{2}$ hours Maximum : 70 marks

MOTHER TERASA LAW COLLEGE
LIBRARY
ILLUPPUR - 622102.

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Discuss the scope of administrative law and bring out the difference between administrative law and constitutional law.

   நிர்வாக சட்டத்தின் நோக்கெல்லையை விவாதிக்கவும். மேலும் நிர்வாக சட்டத்திற்கும் அரசமைப்புச் சட்டத்திற்கும் உள்ள வேறுபாட்டை தெளிவுபடுத்துக.

2. "Courts exercise control on delegated legislation through the doctrine of ultra vires" – Explain.

   "அதிகார ஒப்படைவு விதியாக்கத்தின் மீது நீதிமன்றங்கள் வரம்பு மீறல் கோட்பாடு வழியாக கட்டுப்பாட்டை செயல்படுத்துகிறது" – விளக்குக.

3. Explain the rationale behind the establishment of Public Corporations and state the extent of parliamentary control over them.

   பொது ஆணையம் அமைக்கப்படுவதின் உள்ளார்ந்த காரணங்களை விளக்கி, அவைகளின் மீது நாடாளுமன்ற கட்டுப்பாட்டு எல்லையை எடுத்துரைக்க.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Discuss the role of Ombudsman in remedying citizens' grievances against the Administration.

   நிருவாகத்திற்கு எதிரான குடிமக்களின் முறையீடுகளைச் சரிசெய்வதில் நாடாளுமன்ற ஆணையரின் (ஆம்புட்ஸ்மேன்) பங்கு குறித்து விளக்குக.

5. Explain the essentials of fair hearing.

இருபுறம் கேட்டலின் மூலக் கூறுகளை விளக்குக.

6. Describe the privileges of government in legal proceedings.

சட்ட நடவடிக்கைகளில் அரசுக்குள்ள சிறப்புரிமைகளைப் பற்றி விவரிக்க.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Sovereign functions
இறையாண்மை செயல்கள்

(b) Central Vigilance Commission
மத்திய ஊழல் கண்காணிப்பு ஆணையம்

(c) Henry VIII clause
எட்டாம் ஹென்றி விதி

(d) Speaking orders
காரணம் விளம்பும் ஆணைகள்

(e) Lokpal
லோக்பால்

(f) Writ of Prohibition
தடையுறுத்தும் நீதிப்பேராணை

(g) A.K. Kraipak vs Union of India. AIR 1970 SC 150
எ.கே. கிரைபாக் எதிர் இந்திய ஒன்றியம். AIR 1970 SC 150

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. A Disciplinary proceedings was pending against a government servant, but he was allowed to retire from service. Later the Government wants to continue the disciplinary proceedings. Advise the government servant.

ஒரு அரசு அதிகாரிக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் இருக்கும்போது, அவர் பணியிலிருந்து ஓய்வு பெற அரசு அனுமதித்தது. பின்னர் அவர் மீதான ஒழுங்கு நடவடிக்கையை அரசு தொடர விரும்புகிறது. அரசு அலுவலருக்கு அறிவுரை வழங்குக.

9. ‘A’, is an undertrial prisoner. He was acquitted in the year 2012. But he has not been released from the prison until today. ‘A’ files a writ petition for his release and also seeks compensation against the State in the same petition. The state pleads that the petitioner cannot claim compensation in a writ petition. Decide.

அ என்பவர் ஒரு விசாரணைக் கைதி. அவர் 2012-ல் விடுதலை செய்யப்படுகிறார். ஆனால் இதுநாள் வரை சிறையிலிருந்து விடுவிப்பு செய்யப்படவில்லை. எனவே அவர் தன்னை விடுவிக்கக் கோரி நீதிப்பேராணை மனு தாக்கல் செய்கிறார். அதில் அரசுக்கு எதிராக இழப்பீடும் கேட்கிறார். அரசு, மனுதாரர் நீதிப்பேராணை மனுவில் இழப்பீடு கோர முடியாது என்று வாதிடுகிறது. தீர்மானிக்கவும்.

10. Arun is an illiterate person. He requested to engage a lawyer to represent his matter in a domestic enquiry against him, which was denied by the enquiry committee. Decide whether it will amount to violation of fair hearing.

அருண் என்பவர் ஒரு படிக்காத நபர். அவருக்கு எதிராக உள்ள உட்புற விசாரணையில் அவர் தனக்காக ஒரு வழக்கறிஞரை நியமித்துக் கொள்ள அனுமதி கோருகிறார். விசாரணைக் குழு அவரது கோரிக்கையை மறுக்கின்றது. இச்செயல் நியாயமான கேட்டல் விதியை மீறியதாகுமா? என்று முடிவு செய்க.

---

Register No. [ | | | | | | | | ]

**TA4C** **7185–26**

(For the candidates admitted from 2017 – 2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, MAY 2026.

(Three-year Regular Course)

Second Year – Fourth Semester

LABOUR LAW — I

MOTHER TERASA LAW COLLEGE LIBRARY ★ ILLUPPUR - 622102. ★

Time : 2½ hours Maximum : 70 marks

## PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Critically examine to what extent the Industrial Disputes Act, 1947 has promoted the process of collective bargaining in India.

   1947ம் ஆண்டு தொழிற்துறைச் சச்சரவு சட்டம் எந்த அளவிற்கு கூட்டுப் பேரத்தை இந்தியாவில் ஊக்குவிக்கிறது என்பதை திறனாய்வு செய்க.

2. Explain the constitution, powers and functions of the Advisory Board under the Minimum Wages Act, 1948.

   1948ம் ஆண்டு குறைந்த பட்ச ஊதியச் சட்டத்தின் கீழ் ஆலோசனைக் குழுவின் அமைப்பு, அதிகாரங்கள் மற்றும் செயல்பாடுகளை விளக்குக.

3. Discuss the privileges and immunities of a registered Trade Union with the help of decided cases.

   பதிவு செய்யப்பட்ட தொழிற்சங்கத்தின் சிறப்புரிமைகளையும் விலக்குரிமைகளையும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளுடன் விளக்குக.

## PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Explain the theory of wages.

   ஊதியம் குறித்த கோட்பாடுகளை விளக்குக.

5. Explain the objects of the Industrial Employment (Standing Orders) Act, 1946.

   1946ம் ஆண்டு தொழிலகப் பணிகள் (நிலையாணைகள்) சட்டத்தின் நோக்கங்களை விளக்குக.

6. Explain the various authorities under the Payment of Wages Act, 1936.

   1936ம் ஆண்டு ஊதிய வழங்குதல் சட்டத்தின் கீழ் அதிகாரம் பெற்ற வெவ்வேறு அதிகார அமைப்புகளை விளக்குக.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக:

(a) Registration of Trade Union.

தொழிற்சங்கத்தை பதிவு செய்தல்.

(b) Living Wage.

வாழ்க்கை ஊதியம்.

(c) Equal pay for equal work.

சமமான வேலைக்கு சமமான ஊதியம்.

(d) Domestic enquiry under the Standing Orders Act.

நிலையாணைகள் சட்டத்தின் கீழ் உள்ளகத்து தீர்வம்.

(e) Board of Conciliation.

இசைவிணக்கக் குழுமம்.

(f) State the evolution of Labour Legislations in India.

இந்தியாவில் தொழிலாளர் சட்டங்களின் வளர்ச்சி குறித்து எழுதுக.

(g) Illegal strike.

சட்ட விரோதமான வேலை நிறுத்தம்.

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. 'A' is a member of a trade union. He is 20 years old. Since he has not attained 21 years of age, he has not been appointed as the executive member of the trade union. 'A' challenges. Decide.

A என்பவர் ஒரு தொழிற்சங்கத்தின் அங்கத்தினராவார். அவருக்கு 20 வயது ஆகின்றது. அவருக்கு 21 வயது ஆகாததால் அவரை தொழிற்சங்கத்தின் செயற்குழு உறுப்பினராக நியமிக்கவில்லை. A இதனை எதிர்க்கின்றார். முடிவு செய்க.

9. X is employed in a managerial capacity in a textile unit. He claims to be a workman under the Industrial Disputes Act, 1947. Is this claim justified?

X என்பவர் ஆடைகள் தயாரிக்கும் தொழிற்சாலையில் மேலாண்மைப் பணியில் பணிபுரிகின்றார். அவர் 1947 ஆம் ஆண்டு தொழிற்சச்சரவுச் சட்டத்தின் கீழ் தன்னை பணியாளராகக் கருத வேண்டும் எனக் கோருகிறார்-இந்தக் கோரிக்கை நியாயமானதா?

10. An industrial dispute arises between the management and employees of the Mysore branch of an All India Company having its headquarters at Mumbai. Decide which Government is an appropriate Government to decide this issue.

மும்பையை தலைமையிடமாக உடைய ஓர் அகில இந்திய நிறுவனத்தின் மைசூர் கிளையில் நிருவாகத்திற்கும் பணியாளர்களுக்கும் இடையே தொழிற்துறை சச்சரவு ஏற்படுகிறது. இந்த வழக்கை முடிக்க "உரிய அரசு" எது? என்பதை முடிவு செய்க.

---

Register No. | | | | | | | | |

**TA4D** **7186–26**

(For the candidates admitted from 2017 – 2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, MAY 2026.

(Three-year Regular Course)

Second Year – Fourth Semester

INTERNATIONAL LAW

MOTHER TERASA LAW COLLEGE
LIBRARY
ILLUPPUR - 622102.

Time : 2½ hours Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Examine how far Individuals and International Organisations are subjects of international law.

   எந்த அளவிற்கு பன்னாட்டு அமைப்புகள் மற்றும் தனி நபர்கள் சர்வதேச சட்டத்தின் பொருள் ஆவார்கள் என்பதை ஆராய்க.

2. Explain the various modes of acquiring and loss of 'territory' of a state under the international law.

   பன்னாட்டு சட்டத்தின் கீழ் ஒரு நாடு "ஆள்நிலத்தினை" எந்த எந்த முறைகளில் அடையவும் மற்றும் இழக்கவும் முடியும் என்பதை விளக்கவும்.

3. Discuss the jurisdiction of the International Court of Justice.

   பன்னாட்டு நீதிமன்றத்தின் அதிகார வரம்பினை விவாதிக்கவும்.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Define 'recognition'. Bring out the distinction between De jure and De facto recognition.

   "அங்கீகாரம்" வரையறுக்கவும். நிகழ்வுநிலை மற்றும் சட்டநிலை அங்கீகாரத்திற்கும் உள்ள வேறுபாட்டை எடுத்துக் கூறவும்.

5. Discuss the different theories relating to relationship between international law and municipal law.

சர்வதேச சட்டத்திற்கும் நாட்டுச் சட்டத்திற்கும் இடையே உள்ள தொடர்பை விவரிக்கக்கூடிய பல்வேறு கொள்கைகளை விவாதிக்கவும்.

6. Discuss the privileges and immunities of diplomatic envoy.

வெளியுறவு தூதுவர்களின் சிறப்புரிமைகளையும் விலக்களிப்புகளையும் விவாதிக்கவும்.

## PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Asylum

புகலிடம்

(b) Nottembohm case

நோட்ஃபாம் வழக்கு

(c) Double veto

இரட்டை வாக்கெடுப்பு

(d) Freedom of Air

வான்வெளி சுதந்திரம்

(e) Calvo doctrine

ஃகால்வோ கொள்கை

(f) Formation of treaties

உடன்படிக்கையை ஏற்படுத்துதல்

(g) Art. 38 of Statute of ICJ.

சர்வதேச நீதிமன்ற சாசனத்தின் ஷரத்து 38.

## PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. A, B, C, D four nationals belonging to state 'Z' cause grievous hurt to foreign citizen 'M'. State 'Z' claims exception on the ground that the act has not been caused by its officials. Decide the liability of State 'Z'.

'Z' நாட்டை சேர்ந்த A, B, C, D ஆகியோர் 'M' நாட்டின் நாட்டுரிமையைக் கொண்ட அயல்நாட்டவருக்கு கொடுங்காயத்தை ஏற்படுத்தினர். 'Z' நாடானது அக்கொடுங்காயமானது தன் அலுவலர்களால் ஏற்படவில்லை. ஆதலால் அந்தக் கொடுங்காயத்தை விளைவித்தமைக்கு எதிராக விலக்களிப்பு கோருகிறது. 'Z' நாட்டின் பொறுப்புநிலையைத் தீர்மானிக்கவும்.

9. 'A' takes shelter in 'XY' state after committing offence in 'S' State. 'S' State demands extradition of 'A'. Decide the liability of State 'XY'.

'S' நாட்டில் 'A' குற்றத்தைப் புரிந்த பிறகு 'XY' நாட்டில் அடைக்கலம் புகுந்துவிட்டார். 'A'ஐ 'S' நாடானது மீட்டொப்படைக்க கோருகிறது. "XY" நாட்டின் பொறுப்பு நிலையை தீர்மானிக்கவும்.

10. 'X' company is registered in India. Its shareholders are nationals of Malaysia. But the property of 'X' company is situated in Singapore. And it was damaged due to the negligence of policemen of Singapore. Malaysia claims compensation on behalf of the company before the International Court of Justice. Can it succeed?

இந்தியாவில் 'X' நிறுவனம் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதனுடைய பங்குதாரர்கள் மலேசிய நாட்டைச் சேர்ந்தவர்கள் ஆவார்கள். ஆனால் நிறுவனத்தின் சொத்தானது சிங்கப்பூரில் அமைந்துள்ளது. அங்கு காவல்துறையினரின் கவனக் குறைவால் சேதமாக்கப்பட்டுவிட்டது. மலேசியா நாடானது, நிறுவனத்தின் சார்பாக சர்வதேச நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து இழப்பீடு கோருகிறது. இது வெற்றி பெற முடியுமா?

---

Register No. [ ] [ ] [ ] [ ] [ ] [ ] [ ] [ ]

**TA4F** **7187-26**

(For the candidates admitted from 2023 – 2024 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, MAY 2026.

(Three – year Regular Course)

Second Year – Fourth Semester

BHARATIYA SAKSHYA ADHINIYAM, 2023.

MOTHER TERASA LAW COLLEGE
LIBRARY
ILLUPPUR - 622102.

Time : $2\frac{1}{2}$ hours Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. What facts may not be proved before the court under the BSA, 2023?

   பாரதிய சாட்சிய அதிநியம் 2023-ன் கீழ் நீதிமன்றத்தில் நிரூபிக்கப்படத் தேவையில்லாத சங்கதிகள் யாவை?

2. Explain presumption in rape and dowry death Cases.

   வன்புணர்ச்சி மற்றும் வரதட்சணை மரணம் வழக்குகளில் துணிபுகள் பற்றி விளக்குக.

3. When judgment of court is relevant in Civil and Criminal proceedings as provided in the BSA, 2023? Explain.

   உரிமையியல் மற்றும் குற்றவியல் செயல் முறைகளில் எப்பொழுது நீதிமன்றங்களின் தீர்ப்புரைகள் தொடர்புடையவை ஆகலாம் என்பவை குறித்து பாரதிய சாட்சிய அதிநியம், 2023ல் குறிப்பிடப்பட்டுள்ளதை விளக்குக.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Explain the provision of BSA relating to competency of witnesses.

   பாரதிய சாட்சிய அதிநியத்தில் சான்றுரைஞரின் தகுதி பற்றி, கூறியுள்ளதை விளக்குக.

5. Distinguish between presumption of fact and presumption of Law.

   நிகழ்மை துணிபு மற்றும் சட்டத் துணிபு ஆகியவற்றை வேறுபடுத்திக் காட்டுக.

6. Write briefly about burden of proof in criminal cases.

   குற்றவியல் வழக்குகளில் மெய்ப்பிக்கும் சுமை குறித்து குறிப்பு வரைக.

## PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் வரைக :

(a) Alibi

வேற்றிட வாதம்

(b) Retracted Confession

பின்வாங்கப்பட்ட குற்ற ஏற்புரை

(c) Hearsay Evidence

கேள்வி நிலைச் சாட்சியம்

(d) Patent ambiguity

வெளிப்படை பொருள் மயக்கம்

(e) Disproved

பொய்ப்பிக்கப்பட்ட

(f) Privileged Communications

காப்புடைச் செய்திகள்

(g) Res gestae

ஒன்றியச் செயல்

## PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. The wife saw her husband commits a murder. She refuses to give evidence. Can she be compelled to give evidence against her husband?

தன் கணவர் கொலை செய்வதை மனைவி பார்க்கிறார். தன் கணவருக்கு எதிராக சான்று அளிக்க மறுக்கிறார். அவரை கணவருக்கு எதிராக சான்றுரைக்க கட்டாயப்படுத்த முடியுமா?

9. 'A' sues 'B' for a land of which 'B' is in possession. 'A' claims that the land was left to 'A' by the will of 'C', 'B's father. 'B' denies it. On whom burden of proof would lie?

'B'-யின் உடைமையிலுள்ள ஒரு நிலம், தனக்கு 'B'-யின் தந்தை 'C'-யால் விருப்பாவணம் வாயிலாக தரப்பட்டதாக வலியுறுத்தி 'A' என்பவர் 'B'யின் மீது வழக்கிடுகிறார். அதை 'B' மறுக்கிறார். எவர் மீது மெய்ப்பிக்கும் சுமை உள்ளது?

10. 'A' files a suit for recovery of money due on a bond executed by 'B'. 'B' admits execution of bond but denies liability alleging fraud. In this case what is fact in issue?

ஆவணமொன்றின் அடிப்படையில் கொடுக்கப்பட வேண்டிய பணத்திற்காக 'B' மீது 'A' வழக்கிடுகின்றார். ஆவணம் எழுதிக் கொடுக்கப்பட்டதை ஒப்புக் கொண்டு 'B' அப்பத்திரம் மோசடியால் பெறப்பட்டதாகக் கூறுகின்றார். இந்த வழக்கின் பிரச்சனையில் உள்ள தீர்வு தரு நிகழ்மைகள் என்ன?

---